செய்தி வெளியீடு எண்: 800 நாள்: 16.11.2019

## செய்தி வெளியீடு

## குழந்தைகள் தின சிறப்பு கருத்தரங்கம்

## தமிழகத்தில் குழந்தைகள் முன்னேற்றம், சவால்கள் மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள்

குழந்தைகள் தினத்தையொட்டி, தமிழக அரசும் யூனிசெப் நிறுவனமும் இணைந்து ‘‘தமிழகத்தில் குழந்தைகள் : முன்னேற்றம், சவால்கள் மற்றும் மேற்கொள்ளப்படவேண்டிய வழிமுறைகள்’’ எனும் தலைப்பில், சென்னை, தேனாம்பேட்டை, தனியார் விடுதியில் 14.11.2019 மற்றும் 15.11.2019 ஆகிய இரண்டு நாள் நிகழ்ச்சியாக ஏற்பாடு செய்திருந்த, கருத்தரங்கத்தினை 14.11.2019 அன்று மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் டாக்டர் (திருமதி) வெ. சரோஜா அவர்கள் குத்து விளக்கி ஏற்றி துவக்கி வைத்தார்.

அவர் தனது துவக்க உரையில் குழந்தைகள் நலனுக்காக கருத்தரங்கு ஏற்பாடு செய்தமைக்காக தனது பாராட்டுதல்களை தெரிவித்தார். ஏழை, எளியோர் உள்ளிட்ட அனைத்து தரப்பு குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, பாதுகாப்பு, ஆகிய முக்கிய துறைகளில் அவர்களின் முன்னேற்றத்தின் மீது அதிக அக்கறையுடனும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மேம்பாடு அடைவதற்காகவும், தமிழக அரசு அதன் அனைத்து துறைகள், அரசு சாரா நிறுவனங்கள், பெரு வணிக நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுடன் ஒருங்கிணைந்து பணிகளை செயல்படுத்தி வருவது குறித்தும், இதன் மூலம் ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் தமிழகத்தில் எட்டப்படும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இக்கருத்தரங்கின் துவக்க நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் உள்ள பள்ளிகலிருந்தும், சென்னையில் உள்ள பள்ளிகளிலிருந்தும் மாணவர்கள் பங்கேற்றனர். அம்மாணவர்கள் தங்களது உரையில் எதிர்காலத்தில், குழந்தைகள் நலன் சார்ந்து பள்ளிகளிலும் பிற இடங்களிலும் உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல், மாசு கட்டுப்பாடு, பாதுகாப்பு, குழந்தைகள் மீது தவறான அணுகுமுறை, மற்றும் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளின் பாதுகாப்பு ஆகியவற்றை கொண்ட சமுதாயம் அமைய வேண்டும் என்ற தங்களது விருப்பத்தையும், கனவினையும் பகிர்ந்தனர்.

இரண்டு நாள் நிகழ்வாக நடைபெற்ற இக்கருத்தரங்கில் மொத்தம் 8 அமர்வுகளில் குழந்தைகளின் கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, விளையாட்டு, கலை, பாதுகாப்பு மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளிட்ட கருப்பொருட்கள் இடம் பெற்றிருந்தன. இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கங்களாவன: குழந்தைகளின் நலனை மையப்படுத்தி மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை அனைவரின் கவனத்திற்கு கொண்டு செல்லுதலும் மற்றும் குழந்தைகளின் உரிமைகள் மற்றும் அவர்களின் விருப்பங்களை அடைவதற்கான கொள்கைகளை உருவாக்குதலும், இதற்கான உரிய தீர்வுகளை கண்டறிவதற்கு நம்பகத்தன்மை கொண்ட தரவுகளை அடைதலும் அதன் மூலம் ஒரு கண்காணிப்பு வரையறையை உருவாக்கி அதனை நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் ஒருங்கிணைப்பதும், இவற்றின் வாயிலாக எந்த ஒரு குழந்தையும் விடுபடுதல் இன்றி அனைவருக்குமான வளர்ச்சியை உறுதி செய்வதாகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் அடிப்படை கொள்கையான ஒருவரும் விடுபடுதல் இன்றி அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கையே இக்கருத்தரங்கின் முக்கிய கருப்பொருட்களில் ஒன்றாக அமைந்தது. அரசால் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் குழந்தை நலத் திட்டங்களோடு, மாறுபட்ட திறன்கொண்ட குழந்தைகள், புலம்பெயர்ந்த குழந்தைகள், காப்பகங்களில் வளரும் குழந்தைகள், குழந்தை தொழிலாளர்கள், கொத்தடிமையாக்கப்பட்டவர்கள், இயற்கை சீற்றங்கள், பேரிடர்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பாலின மாற்றம் கொண்ட குழந்தைகள், எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிறப்பு கவனமும், அவர்களின் வளர்ச்சி தேவைகளை உறுதிசெய்ய சிறப்பு உத்திகளும் தேவைப்படுகின்றன.

யூனிசெப், சென்னை பிரிவின் தலைவர் தனது உரையில் அரசின் பல்வேறு துறைகளின் கொள்கைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு இவற்றால் குழந்தை நலனின் வெளிப்பாட்டு காரணிகள் சிறந்த நிலையில் உள்ளதை குறிப்பிட்டு பாராட்டினார்.

இக்கருத்தரங்கின் நிறைவு நிகழ்ச்சியில் பங்கேற்ற அரசு தலைமைச் செயலாளர் தனது நிறைவுரையில் மாநில அரசு குழந்தை நலனில் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிட்டு அரசு குழந்தைகள் நலனை மேம்படுத்த தற்போது ஏதும் குறைகள் இருப்பின் அதனை சீர்செய்யவும், அவற்றிற்கான புதிய கருத்துகளை எதிர்நோக்குவதாக தெரிவித்தார். குழந்தை பருவத்தை முழுமையாக துய்க்கவும், அவர்கள் முழுமையான வளர்ச்சியை எய்த ஏதுவான சூழலை உருவாக்குவதும், அனைவருக்கும் வசதிகள் கிடைப்பதை மேம்படுத்தவும், பாதுகாப்பான, தரமான விடுதி வசதிகளை ஏற்படுத்தவும், தற்போதைய உத்திகளை புத்தாக்கம் செய்யவும், திட்டங்களை

மறுவடிவாக்கம் செய்யவும், மாற்றங்களை நடைமுறையில் கொணரவும், விழிப்புணர்வை அதிகரிக்கவும், இவற்றிற்கெல்லாம் முதன்மையாக குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதுமே இனி மேற்கொள்ளவேண்டிய பணிகளாகும் எனத் தெரிவித்தார்.

பள்ளிக்கல்வி, சமூகநலம் மற்றும் சத்துணவு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, கலை மற்றும் பண்பாடு, பிற்பட்டோர் நலன், மிகப்பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் பணிகள், தமிழ்நாடு திறன்மேம்பாட்டு கழகம், தமிழ்நாடு சுகாதார சீரமைப்புத் திட்டம், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து துறையின் உயர் அலுவலர்கள் இக்கருத்தரங்கில் பங்கு பெற்றனர். யூனிசெப் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள், தேசிய திறந்தநிலை பள்ளிகளின் மண்டல இயக்குநர், பல்வேறு தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், வல்லுநர்கள், கல்வியாளர்கள், சமூக அமைப்பு நிறுவனங்களை சார்ந்தவர்கள், ஆசிரியர்கள், ஊராட்சி நிலையிலான கூட்டமைப்பின் உறுப்பினர் ஆகியோர் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**